

கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதி அ.தி.மு.க.வை சேர்ந்த மகேந்திரன் சரண்யா ராஜேந்திரன் இந்திராணி ஹரிகிருஷ்ணன் ,ஜனனி ரங்கநாதன் கனகராஜ் ஆகியோர் தலைமையில், தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில், 200 க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, பகுதி கழக செயலாளர் சரத், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம் கூவத்தூர் கிராமம் கலைஞர் திடலில் ஒன்றிய கழக செயலாளர் ஆர். கலியபெருமாள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை விஜயா, கழக இளம் பேச்சாளர் மோகன், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் கலா சுந்தரமூர்த்தி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் டேவிட், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மேலிட ஒன்றிய பார்வையாளர் இரவிகுமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# ஓசூர் - தளி சாலை இந்த ஆண்டு போடப்படுமா?

## சட்டப் பேரவையில் ஒய்.பிரகாஷ் கேள்வி!

சென்னை, மார்ச் 31 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது ஓசூர் - தளி சாலை இந்த ஆண்டு போடப்படுமா? என்று தொகுதி உறுப்பினர் ஒய்.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து விவாதம் வருமாறு:

**ஒய்.பிரகாஷ்:** என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதியில், ஓசூர்தளி சாலையும், TVS Motor Company முதல் ராயக்கோட்டை வரையிலும் இருவழிச் சாலை நான்கு வழிச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஓசூர்தளி சாலையில் 3 கிலோ மீட்டரும், TVSலிருந்து ராயக் கோட்டை செல்லும் சாலையில் 2 கிலோ மீட்டரும் போடப்படாமல் இருக்கிறது. அந்தச் சாலைகள் இந்த ஆண்டு முடிக்கப் படுமா ?

**அமைச்சர் எ.வ. வேலு:** ஓசூர் Industrial area என்கிற காரணத்தினால், முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்தி கொண்டிருக்கிறோம்.

சட்டமன்ற உறுப்பினர் பிராகாஷ் குறிப்பிட்டதைப்போல, இடைப்பட்ட இரண்டு இடங்களும், குறுகிய சாலைகளாக இருந்த காரணத்தால் நான்கு வழிச் சாலையாக மாற்ற இயலவில்லை. அதற்கு period முடியாத காரணத்தினால்ஏனெனில், ஒரு சாலை போடப்பட்டால் ஐந்து வருடங்கள் முடிந்த பிறகுதான் அதை renewal செய்ய முடியும். Period முடியாத காரணத்தினால்தான் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விதிகளுக்குட்பட்டு இருக்குமேயானால் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### சீர்காழி நகரில் குறைந்த மின் அழுத்தத்தை போக்க

# துணை மின் நிலையம் ஒன்று அமைத்திட வேண்டும்!

## பேரவையில் சீர்காழி மு.பன்னீர்செல்வம் கேள்வி!

சென்னை, மார்ச் 31 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது சீர்காழி நகரில் குறைந்த மின் அழுத்தத்தை போக்க துணை மின் நிலையம் அமைத்திட வேண்டும் என்று பேரவையில் சீர்காழி மு.பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து விவாதம் வருமாறு:

**மு.பன்னீர்செல்வம்:** சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் குறைந்த மின் அழுத்தத் தைப் போக்க நீண்டகால மாக நிலுவையில் உள்ள சீர்காழி அருகே இருக்கக் கூடிய திட்டை கிராமத்தில் நிலமும் தயாராக இருக்கி றது. எனவே, அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரு வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**வி. செந்தில்பாலாஜி:** சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் மூன்று புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கி இருக்கின்றார்கள். திட்டைப் பகுதியில் 1.16 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு அதற்கான பணிகளை விரைவில் தொடங்க இருக்கிறோம் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கொள்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### பெரம்பலூர் - பூலாம்பாடி பேரூர்க் கழகம் சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## வீ.ஜெகதீசன் - சேலம் சுஜாதா சிறப்புரை!

பெரம்பலூர், மார்ச் 31 - பெரம்பலூர்மாவட்டம் பூலாம்பாடி பேரூர் கழகம் சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மாபெரும்பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொருப்பாளர் வீ.ஜெகதீசன் , தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

பெரம்பலூர் மாவட்டம், பூலாம்பாடி பேரூர் கழகம் சார்பில், கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலெட்சுமி சேகர் தலைமையில், பூலாம்பாடி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் எல்.செல்வராஜ்

வரவேற்புரையில், பூலாம்பாடி பேரூராட்சி தலைவர் பாக்கியலெட்சுமி செங்குட்டுவன்,

பேரூர் அவைத்தலைவர் எஸ்.செல்வராஜ், பேரூர் துணைச் செயலாளர்கள் சாந்தி கருணாகரன், பி. கபில், பி.வி.சுதாகர், பொருளாளர் பி.எம்.பழனிமுத்து,

மாவட்ட பிரதிநிதிகள் பி.மணி, ஆர்.செங்குட்டுவன், பி.ராஜாராம், பி.பாலகிருஷ்ணன், பி.ஜெயராம், அறங்காவலர் குழு தலைவர் கே.கிருஷ்ணமூர்த்தி, பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் குழு உறுப்பினர் அ.வினோத் ஆகியோர் முன்னிலையில், பூலாம் பாடி கலைஞர் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தலைமைக் கழக பேச்சாளர் சேலம்.சுஜாதா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.முருகேசன், அரசு குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் (எ)ஹரிபாஸ்கர், அரும்பாவூர் பேரூர் கழக செயலாளர் எம்.ஆர்.ரவிச்சந்திரன்,

அரும்பாவூர் பேரூராட்சி தலைவர் வள்ளியம்மை ரவிச்சந்திரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் நெ. அருண்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காடூர்.கவியரசு, மாவட்ட பிரதிநிதி எஸ். அழகுவேல், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா, ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் மீ.முகமதுஹாலித் மற்றும் கள்ளப்பட்டி அன்பரசன், அரனாரை ஜெயக்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய பிரதிநிதி எம். ஜானகிராம் நன்றியுரையாற்றினார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் புதுக்கோட்டையில் மாவட்ட பொருளாளர், துணை மேயர் எம்.லியாகத் அலி தலைமையில் நடைபெற்ற சமுகநல்லிணக்க இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் அரு.வீரமணி, பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, கீரை. தமிழ் ராஜா, சு.சண்முகம், மேயர் திலகவதி செந்தில், ஆர்.ஆர்.சாமிநாதன், வே.ராஜேஸ், எஸ்.கே.கலியமூர்த்தி, சங்கர், அப்துல் கனி, அஸ்ரப் அலி, தயானந்த சரஸ்வதி சாமிகள், க.நைனா முகமது, அ.ரெத்தினம், மு.கலைஞர் கருணாநிதி, இதயம் அப்துல்லா மற்றும் கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி நிர்வாகிகள், அனைத்து மதத்தினர் கலந்து கொண்டனர்.

### பட்டுக்கோட்டை தொகுதி

# சிரமேல்குடி ஊராட்சியில் 110 கே.வோ.துணை மின்நிலையம் அமைத்திடுக!

## பேரவையில் கா.அண்ணாதுரை கோரிக்கை!

சென்னை, மார்ச் 31 - சட்டப்பேரவையில் பட்டுக்கோட்டை தொகுதி, சிரமேல்குடி ஊராட்சியில் 110 கே.வோ. துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று தொகுதி உறுப்பினர் கா. அண்ணாதுரை கோரிக்கை விடுத்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:

**கா.அண்ணாதுரை:** பட்டுக் கோட்டை தொகுதி, சிரமேல்குடி ஊராட்சியில் 110 KV துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் செந்தில் பாலாஜி:** பட்டுக்கோட்டை தொகுதி, சிரமேல்குடி ஊராட்சிக்கு மதுக்கூர் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சிரமேல்குடியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை

**கா.அண்ணாதுரை:** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த துணை மின் நிலையப் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடுகிறேன். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்திற்குப் பதிலாக அதே பகுதியிலுள்ள வேறு இடத்திலே அமைப்பதற்கான வாய்ப்பிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதே பகுதியில் இருக்கக்கூடிய கருப்பூர், கீழக்குறிச்சி, ஒலையகுன்னம், ஆவிக் கோட்டை, புலவஞ்சி, வடக்கு மதுக்கூர், மோகூர், சிராங்குடி மற்றும் அண்டமி ஆகிய ஊராட்சிகளுக்கு ஒரத்தநாடு வட்டம், வடசேரியில் உள்ள 110 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது.

இந்தப் பகுதி கடைமடைப் பகுதி என்பதாலும், குறைந்த மின்னழுத்தம் காரணமாக, விவசாயிகள், பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே, மேற்கண்ட கருப்பூர் கிராமத்தில் சர்வே எண் 166ன்கீழ் 10ல்,

0.87 ஹெக்டேர் நிலம் தரிசு நிலமாக உள்ளது. கருப்பூர் ஊராட்சி மன்றமும் அந்த இடத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கலாம் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு முன்வருவார்களா

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் 16 புதிய துணை மின் நிலையங்களும், 1 துணை மின் நிலையத்தினை தரமுயர்த்தக்கூடிய பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதிகளை வழங்கியிருக்கிறார்கள். அந்த 16 துணை மின் நிலையங்களில், பட்டுக்கோட்டை தொகுதியில் 2 புதிய துணைமின்நிலையங்களை அமைப்பதற்கான அனுமதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடுதலாக, கருப்பூர் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

துறையினுடைய அதிகாரிகளுக்கு இதுகுறித்து எடுத்துச் சொல்லி, அந்தப் பகுதியில் ஆய்வு செய்யப்படும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கா. அண்ணாதுரை:** அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக் கோட்டை ஒன்றியம், இராஜாமடம் மற்றும் ஏரிப்புரக்கரை கிராமங்கள் மீனவக் கிராமங்களாகும். இந்தப் பகுதியில் நிலவும் குறைந்த மின்னழுத்தம் காரணமாக அருகிலுள்ள கொள்ளுக்காடு கிராமத்தில் 33 K.V. துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், அந்த இடத்திற்கு அருகில் சமையல் எரிவாயு கிடங்கு இருப்பதால் அந்த இடம் கைவிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தப் பகுதியிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரி வளாகத்தில், இந்தத் துணை மின் நிலையம் அமைய வாய்ப்புள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்திலே துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**வி.செந்தில்பாலாஜி:** பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியல் சீரான மின் விநியோகம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக 538 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, இப்போது தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. உறுப்பினர் அவர்கள் கொள்ளுக்காடு கிராமத்தில் ஏற்கெனவே இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்திற்கு அருகில் அமைக்க முடியாது என்று கூறியிருக்கின்றார்கள். புதிய இடமாக கல்லூரி அமைந்திருக்கின்ற இடத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். துறையினுடைய அதிகாரிகளிடத்தில் சொல்லி, அது மற்றொருதுறையினுடைய இடமாக இருப்பதால், அந்த இடம் தேர்வு செய்யப்பட்டு, வகை மாற்றம் செய்யப்பட்டால் முன்னுரிமை அடிப்படையில் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### திருவாரூர் மாவட்டம் முழுவதும் 30க்கும் மேற்பட்ட இடங்களில்

# ஒன்றிய பா.ஜ.க.அரசுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி.கே.கலைவாணன்-ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு!

திருவாரூர், மார்ச் 31 - தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு வஞ்சித்து ,திராவிட நாயகர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் உலக அரங்கில் பாராட்டப்பட்டு வரும் தமிழ் நாட்டின் வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாமல் , நியாமாக தரப்படவேண்டிய நிதியை வேண்டுமன்றே நிறுத்தி வைத்திருக்கும் ஒன்றிய பா.ஜா.க. அரசின் மக்கள் விரோதப் போக்கை கண்டித்து தலைமைக்கழகத்தின் வழிகாட்டுதல்களின்படி , திருவாரூர் மாவட்டத்தில் 30க்கும் மேற்பட்ட இடங்களில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் தொழில்,முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, மாவட்டக்கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம். எல்.ஏ.,தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன், இளைஞர் அணி துணை செயலாளர், தாட்கோ தலைவர் நா. இளையராஜா,கழக சட்டத்திருத்தக்குழுஉறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட முன்னாள் ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு உள்ளிட்ட நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகளுடன் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

ஒன்றிய கழக செயலாளர்கள் வீ.அன்பரசன், எஸ். ஜோதிராமன், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், ஆர்.பாலசந்திரன், கோ.தெட்சிணாமூர்த்தி, இரா.மனோகரன், பால.ஞானவேல், சேகர் கலியபெருமாள்,புலிவலம் ஏ.தேவா,ப.பிரகாஷ், ஐ.வி.குமரேசன், டி.எஸ். டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கேவிகே ஆனந்த் ப.பிரபாகரன், வே.மனோகரன், கேப்டன் செல்வராஜ், ஆகியோர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் மாவட்ட துணை செயலளர்கள் எம். எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கார், மு.வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ஞானசேகரன் , ப.ஆடலரசு, கே.செல்வம்.

நகர செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், வீரா. கணேசன், ஆர்.ராஜசேகரன், பா.சிவநேசன், ஏ.கே. டி.சேரன், எஸ்.வி.பக்கிரிசாமி, நன்னிலம் பக்கிரிசாமி, பேரூர் செயலாளர்கள் பூண்டி.கே.கலைவேந்தன், பேரளம் தியாகு மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் , மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு, கிளைக்கழக நிர்வாகிகளுடன், கழக தோழர்களும், நூறுநாள் வேலையில் ஈடுபடும் பல்லாயிரக்கணக்கான பெண்களும் பெருந்திரளாக பங்கேற்று ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் அ.நா.மங்கலம் பகுதியில் ஒன்றிய செயலாளர் ரத்தினவேல் தலைமையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி பிறந்த நாள் விழா மற்றும் பட்ஜெட் விளக்க மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் தலைமை கழக பேச்சாளர் எழும்பூர் கோபி கலந்து கொண்டு உரையாற்றினார். கூட்டத்தில் அவைத்தலைவர் கௌதமன், தலைமை செயற்குழு உறுப்பினர் சங்கர், கோபால், பழனிவேல், செந்தில், ஆறுமுகம், மகாலட்சுமி, அகரம் ராஜேந்திரன், ராஜா, கண்ணையன், பாரதி ஜெயக்குமார், பாக்கியலட்சுமி, செல்வராணி ஆறுமுகம், கார்த்திகேயன், செல்வராஜ், ஏடிசி ராஜேந்திரன், யுவராஜ்,லோகு, தயாநிதி, அசோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.